www.Padasalai.Net

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை –6

ந.க.எண்.62956/எம்/இ4/2023, நாள். 04.06.2024.

பொருள்: பள்ளிக்கல்வி – அரசு / அரசு நிதியுதவி பெறும்/ தனியார் பள்ளிகள் – மாணவ/ மாணவிகளுக்கான பயிலும் பள்ளியிலேயே – அஞ்சல் துறை மூலமாக – வங்கி கணக்கு துவங்குதல் – சார்பு.

பார்வை:
1. அரசாணை நிலை எண்.72 பள்ளிக் கல்வித்துறை, நாள்.11.03.2024.
2. இவ்வலுவலக இதே ந.க.எண்.62956/எம்/இ4/2023, நாள்.12.03.2024.
3. அரசுச் செயலரின் நே.மு.க எண்.1729/அகஇ2/2024–2, நாள்.29.05.2024.
4. மின்னஞ்சல் நாள்.30.05.2024, தலைமை அஞ்சலக அலுவலர்– புரிந்துணர்வு ஒப்பந்த நகல், நாள்.30.05.2024.
5. பள்ளிக்கல்விதுறை மற்றும் அஞ்சலக துறையுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் ந.க.எண்.62956/எம்/இ4/2024, நாள்.31.05.2024.
6. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர், தொடக்கக்கல்வி இயக்குநர் மற்றும் தனியார் பள்ளிகள் இயக்குநரின் இணைச் செயல்முறைகள் ந.க.எண்.62956/எம்/இ4/2023, நாள்.31.05.2024.

*****

பார்வை 5 – இன் படி, அனைத்து பள்ளிகளிலும் உள்ள மாணவ மாணவியர்களுக்கு வங்கி கணக்கு துவங்குவதன் பொருட்டு பள்ளிக்கல்வி இயக்ககம் அஞ்சல் துறையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

மேலும் பார்வை 6 – இல் காணும் செயல்முறைகளில் வங்கிக் கணக்கு துவங்குவதற்கான நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 5–இல் மேற்கொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி அஞ்சலக அலுவலர்கள் அஞ்சல் நிலையத்திற்கு அருகாமையில் உள்ள பள்ளிகளில் மாணவ மாணவிகளுக்கு வங்கி கணக்கு துவங்கும் பொருட்டு பள்ளிகளில் முகாம் அமைப்பதற்காக தலைமையாசிரியர்களை தொடர்பு கொண்டு அதற்கான பணிகளை மேற்கொள்வர், மேற்குறிப்பிட்ட பணிகளை சிறப்பாக மேற்கொள்வதற்கு ஏதுவாக தேவையான அனைத்து ஒத்துழைப்புகளையும் அஞ்சலக அலுவலர்களுக்கு தலைமையாசிரியர்கள் வழங்கிடவும், வங்கி கணக்கு இல்லாத மற்றும் வங்கிக் கணக்கு செயல்பாட்டில் இல்லாத அனைத்து மாணவ மாணவிகளுக்கும் புதிய அஞ்சலக வங்கி கணக்கை துவங்கி அவ்வாறு துவங்கப்பட்ட வங்கி கணக்கு சார்ந்த விவரங்களை EMIS – இல் STUDENT PROFILE –ல் சரியாக பதிவேற்றம் செய்வதற்கான வழிகாட்டுதல்களை அனைத்து தலைமை ஆசிரியர்களுக்கும் வழங்கிடுமாறு அனைத்து முதன்மை கல்வி அலுவலர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

www.Padasalai.Net

பயிலும் பள்ளியிலேயே வங்கி கணக்கு துவங்குதல் என்ற திட்டத்தின் கீழ் முகாம் நடத்துவதற்கு முதற்கட்டமாக அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளை தேர்வு செய்து அஞ்சலக துறையுடன் இணைந்து மாதவாரியாக பள்ளிகளில் முகாம் அமைப்பதற்கான செயல்திட்டத்தை வகுத்து பள்ளித் தொடங்கும் நாள் முதல் முகாம்களை செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது. முகாம் நடத்தப்படும் பள்ளிகளின் விவரத்தினை மாவட்ட அஞ்சலக துறை ஒருங்கிணைப்பாளருக்கு வழங்கி, முகாமில் வங்கி கணக்கு துவங்குவதற்கு தேவைப்படும் ஆவணங்களின் விவரங்களை அஞ்சல் துறையின் மூலம் பெற்று தயார்நிலையில் வைப்பதற்கான வழிகாட்டுதல்களை அனைத்து தலைமையாசிரியர்களுக்கும் வழங்கிடுமாறு அனைத்து முதன்மை கல்வி அலுவலர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.இப்பொருள் சார்ந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரத்தினை இவ்வலுவலகம் அனுப்பிடுமாறும் அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இயக்குநர்
04/04/24

பெறுநர்:

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்(தொடக்கக்கல்வி)
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்(தனியார் பள்ளிகள்)
(மின்னஞ்சல் மூலமாக)

நகல்:

1. அரசுச் செயலர்
   பள்ளிக்கல்வித்துறை,
   சென்னை–9 – தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது
2. மாநில திட்ட இயக்குநர்,
   மாநில திட்ட இயக்ககம்,
   சென்னை.
3. முதன்மை அஞ்சல் துறை தலைவர்,
   தலைமை அஞ்சலகம்,
   அண்ணா சாலை, சென்னை.
4. தொடக்கக் கல்வி இயக்குநர்,
   தொடக்கக் கல்வி இயக்ககம்,
   சென்னை – 06.
5. தனியார் பள்ளிகள் இயக்குநர்,
   தனியார் பள்ளி இயக்ககம்,
   சென்னை – 06.